# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2017/2018

## ECS 4143: சூழல் பொருளியல் (Environmental Economics)

அறிவுறுத்தல்கள்:

நேரம்: 03 மணித்தியாலங்கள்

. பகுதி ஒன்றில் இரண்டு வினாக்களுக்கும் பகுதி இரண்டில் மூன்று வினாக்களுக்குமாக மொத்தமாக ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

---

### பகுதி I

01) i ஒரு பொருளாதார முறைமையின் நிலைத்திருத்தலுக்கு உதவும் சூழலின் பிரதான பொருளாதாரத் தொழிற்பாடுகளை பொருட் சமநிலை மாதிரியுருவினைப் பயன்படுத்தி விளக்குக.

(10 புள்ளிகள்)

ii பொருத்தமான வரைபடமொன்றினைப் பயன்படுத்தி சூழலுக்கும் வாழ்க்கைத்தரத்திற்கும் இடையிலான தொடர்பினை விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02) i சந்தைப் பொறிமுறையொன்றின் கீழ் மாசுபடுத்துபவர் மற்றும் பாதிப்பிற்குள்ளாகும் நபர்களுக்கிடையில் பேரம்பேசும் செயன்முறைக்கூடாக மாசடைதலுக்கான உத்தம மட்டத்தினை எவ்வாறு அடைந்துக்கொள்ளலாம் என்பதனை பொருத்தமான வரைபடத்தினைப் பயன்படுத்தி விளக்குக.

(14 புள்ளிகள்)

ii கோஸ் தேற்றத்திற்கு எதிராக முன்வைக்கப்படும் விமர்சனங்கள் எவை?

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03) i சூழல் தரநிலை என்றால் என்ன? அவற்றின் வகைகளைச் சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

ii சூழல் மாசைக் கட்டுப்படுத்தும் சந்தைப் பொறிமுறையல்லாத முறைகளைக் குறிப்பிட்டு, அவற்றில் மூன்றினை வரைபடங்களுடன் உதவியுடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

### பகுதி II

04) இலங்கை எதிர்கொள்ளும் மிக முக்கியமான சூழல் பிரச்சனைகளைக் குறிப்பிட்டு அதற்கான காரணங்கள், அதன் விளைவுகள் மற்றும் அவற்றை முகாமை செய்வதற்கான வழிமுறைகளை பேண்தகு அபிவிருத்தியோடு தொடர்புபடுத்தி ஆராய்க.

(மொத்தம் 20 புள்ளிகள்)

05) i “ஹொட்டலின் வித”ி என்பதனால் விளங்கிக்கொள்ளப்படுவது யாது? பொருத்
வரைபடத்தினைப் பயன்படுத்தி புதுப்பிக்கமுடியாத வளங்களின் உத்தம
அகழ்வினை விளக்குக.

(12 புள்

ii பின்வரும் பரமாணங்களில் ஏற்படும் மாற்றமானது “ஹொட்டலின்” விதி
உருவாக்கப்படும் உத்தம விலை மற்றும் வளப்பாவனைக் காலம் என்பன
எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதனை வரைப்படம் மூலம் விளக்குக.

(அ) கழிவு வீதத்தில் ஏற்படும் வீழ்ச்சி
(ஆ) பின்நிறுத்தல் தொழில்நுட்ப விலையில் ஏற்படும் அதிகரிப்பு
(இ) அகழ்வுச் செலவில் ஏற்படும் வீழ்ச்சி
(ஈ) வளங்களிற்கான கேள்வியில் ஏற்படும் வீழ்ச்சி

($2 \times 4 = 08$ புள்

(மொத்தம் 20 புள்

06) i சூழலியல்சார் தீர்மானமெடுத்தலில் செலவு நன்மைப் பகுப்பாய்வின் முக்கிய
மற்றும் அதன் பிரதான படிமுறைகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(08 புள்

ii செலவு நன்மைப் பகுப்பாய்வு மதிப்பீட்டின் போது காணப்படும் பிரச்சின
வரையறைகள் மற்றும் அதற்கான மாற்றுமதிப்பீட்டு முறைகள் தொடர்பாக வி

(12 புள்

(மொத்தம் 20 புள்

07) பின்வரும் சூழலியல் மதிப்பீட்டு நுட்பமுறைகளில் ஒன்றினைத் தெரிவுசெய்து
பண்புகளையும், அதனைக்கையாண்டு சூழல் மதிப்பீடும் மற்றும் பெறுமதி
எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என்பதனையும், அதன் அனுகூலங்களையும்

(அ) “ஹெடோனிக் விலை” மாதிரியுரு (Hedonic Price Model)
(ஆ) “கொன்ரின்ஜன்” பெறுமதியிடல் நுட்பம் (Contingent Valuation Method)
(இ) போக்குவரத்துச் செலவு மாதிரியுரு (Travel Cost Method)

(மொத்தம் 20 பு

*********